**பாணந்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மின்சார களஞ்சிய இருப்பு மீதி ரூபா 397,500 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி அதிகரித்து சிட்டையிடப்பட்டமையால் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட ரூபா 1,128,611 தொகை ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், பற்றாக்குறை மிகைக் கணக்கு வரவு வைக்கப்பட்டு ஆதனவரி சேகரித்தல் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் ஆதனவரி வருமானம் ரூபா 1,128,611 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முத்திரைக் கட்டண வருமானத்தை ஈடுசெய்யும் அடிப்படையில் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,777,750 பெறுமதியான 02 உழவு இயந்திரங்கள் மற்றும் 02 ரேலர்களின் பெறுமதி அறவிடப்பட வேண்டிய பயன்பாட்டுச் சேவைக் கணக்கில் வரவு மற்றும் மாகாண சபை கடன் கணக்கில் செலவு வைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தில் மூலதன செலவினங்களின் கூட்டுப்பெறுமதி பொழிப்பு செலவின அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,565,126 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,028,240 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக ஆண்டின் மூலதனச் செலவினங்களின் பெறுமதி ரூபா 536,886 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித செலவினக் கடன் கொடுத்தோர் பெறுமதி மற்றும் ஆண்டின் செலவினம் என்பன ரூபா 43,272 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 1000 கிலோமீற்றர் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்குரிய 04 வேலைகளுக்காகவும் பன்முகப்படுத்தப்பட்ட நிதிய வேலைகளுக்காக கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,290,118 தொகை அதிகரித்தும், சபை வேலைகளின் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 206,967 தொகை குறைவாகவும் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி மற்றும் வேலைச் செலவினம் என்பன ரூபா 1,083,151 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 9,710,453 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,763,291 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 52,838 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு முதலீட்டுப் பெறுமதி, முதலீட்டுச் சான்றிதழ் பத்திரங்களின் பிரகாரம் ரூபா 94,021,190 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 94,551,268 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலையான வைப்பு முதலீட்டுப் பெறுமதி ரூபா 530,078 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2016 ஆம் ஆண்டின்போது சம்பளமற்ற விடுமுறை பெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 381,929 தொகை நடப்பாண்டின் செலவினம் மீளப் பெறுவனவாக சம்பளம் மற்றும் வேதனங்களிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் வேதனங்களின் செலவினம் ரூபா 381,929 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 221,514,261 தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 12,254,050 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் ரூபா 3,470,393 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரித்தொகை ரூபா 2,916,490 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, முற்பணப் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு, வைப்புப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 101,201,425 கூட்டுத்தொகையான 11 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவு | - | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல், சிற்றுண்டிச் சாலை அல்லது தங்குமிடங்களின் அந்த நிறுவனங்களின் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதம் வரையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான சகல காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(இ) | 2,773,982 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்பட்ட முற்பணத்தொகை உரிய பணி நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை |
| | (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 5,247 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 03 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | 2,923,112 | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியின் போது முன்னைய சகல வைப்புக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு காலாவதியான வைப்புக்களை அரச வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 09 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1997 ஆம் இலக்க வர்த்தமானி | 177,490 | பிரதேச சபை எல்லையில் விளம்பர அறிவித்தல்களை நிர்மாணித்தல் மற்றும் காட்சிப்படுத்தலுக்காக கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், தெரிவுக் கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் பிரகாரம் வாத்துவ உப அலுவலகப் பிரதேசத்தில் கட்டணம் அறவிடப்பட வேண்டிய விளம்பர அறிவித்தல் / 37 பெயர்ப் பதாதைகளுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | - | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடிய 20 நிறுவனங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 65,254,035 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 85,717,536 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 26,575,000 | 32,642,175 | 30,827,066 | 28,940,466 | 26,345,500 | 29,026,502 | 28,222,569 | 27,515,429 |
| வாடகை | 10,135,500 | 3,069,708 | 3,240,845 | 3,617,915 | 14,711,000 | 3,080,635 | 3,184,080 | 3,789,053 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 475,500 | 474,200 | 477,750 | 500 | 401,000 | 453,104 | 455,804 | 4,050 |
| ஏனைய வருமானம் | 79,305,500 | 61,002,500 | 57,344,046 | 70,379,045 | 93,659,000 | 76,005,000 | 76,860,185 | 74,157,687 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 105,466,219 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 97,188,583 ஆகும். ஆண்டின் போது பெறுவனவுகள் பதிவழித்தல் மற்றும் சீராக்கல்கள் ரூபா 99,716,876 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 102,937,926 ஆகும்.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) ஆதன வரி**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை மீதி ரூபா 22,651,829 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 11,761,770 தொகை அதாவது 52 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமான அறிக்கைக்கும் நிலுவை ஆதனவரி பதிவேட்டிற்கும் இடையே ரூபா 4,458,682 வேறுபாடு காணப்பட்டது.

(iii) மீளாய்வாண்டிற்கான ஆதனவரி சிட்டையிடல் ரூபா 29,169,233 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 18,097,668 தொகை அதாவது 62.4 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 21,961,624 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 28,733,105 ஆனமையால் ரூபா 6,771,481 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 வாடகை**

**கடை வாடகை**

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 3,671,630 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 280,350 தொகை அதாவது 7.64 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கடை வாடகை சிட்டையிடல் ரூபா 3,069,708 ஆக இருந்ததுடன், ஆண்டின் போது அதில் ரூபா 2,750,483 தொகை அதாவது 89.60 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த நிலுவை கடை வாடகை ரூபா 3,710,505 ஆகும்.

(இ) பொதுச் சந்தை வாடகை புதிய மதிப்பீட்டின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் கடை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் பாதுகாப்பு பிணை அறவிடுவதற்கும் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுச் சந்தையில் முதலாவது கட்டத்தின் 06 கடைகளும், இரண்டாவது கட்டத்தில் 09 கடைகளும் மற்றும் மூன்றாவது கட்டத்தில் 05 கடைகளும் சட்டரீதியான உடன்படிக்கையின்றி வாடகைப் பணம் மாத்திரம் அறவிடப்பட்டு வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(உ) பொதுச் சந்தையின் மூன்றாவது கட்டத்தில் 02 ஆம் இலக்க இறைச்சி விற்பனைக் கடை 2014 மார்ச் 01 முதல் மூன்று வருட காலத்திற்காக ரூபா 10,250 தொகையான மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகைக் காலம் 2017 மார்ச் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மீண்டும் கேள்வி கோரி வாடகைக்கு வழங்கப்பட்டிராததுடன், 2014 ஆம் ஆண்டின் வாடகை பணத்தை அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டின் போதும் வாடகைப் பணம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,716,190 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 65,651,305 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உபவிதி

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் செயற்திட்டத்தின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உபவிதி எதுவும் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) நிதிஏற்பாடு வழங்கப்படாமை

தயாரிக்கப்பட்டுள்ள வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிலைவேற்ற வேண்டியிருந்த இலக்குகளுக்காக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) செயற்திட்டத்தை அமுல்படுத்தல்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்கள் 50 ஆக இருந்த போதிலும், ஆண்டின் போது அதில் 38 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 38 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

#### (ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமையினால் 2017 ஆம் ஆண்டில் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக ரூபா 11,230,040 தொகையொன்று தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்கள் மீளாய்வாண்டின் ஆதனவரி வருமானத்தில் 38 சதவீத அளவாக இருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 11 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

(i) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 25/2014 ஆம் இலக்கத்தின் பிரகாரம் 10 நிரந்தர ஊழியர்கள் ஆரம்பப் பிரிவின் பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டாம் நிலையில் பதவியணியினரின் 06 பதவிகளுக்காக 13 உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப பதவியணியினரில் 05 பதவிகளுக்காக 19 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டனர்.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் 28 அமைய ஊழியர்களும் 03 செயற்திட்ட ஊழியர்களும் காணப்பட்டனர்.

(iv) 2006 ஆம் ஆண்டு முதல் பயிற்சியற்ற தொழிலாளர் ஒருவராக சபைக்கு இடமாற்றலாகி வந்து மொறட்டுவ மாநகர சபையின் உறுப்பினராக செயற்பட்ட ஒரு ஊழியர் 2015 முதல் 2016 நவம்பர் வரை வரவுப் பதிவேட்டில் கையொப்பம் இடல் மாத்திரம் மேற்கொண்டு சபைக்கு எந்தவித சேவையும் ஆற்றாதிருக்கும் போது சம்பளமாக ரூபா 724,695 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2016 யூலை 18 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் வரை சேவைக்கு அறிக்கையிடாதிருந்த இந்த ஊழியருக்கு தாபன விதிக் கோவையின் 12 ஆவது அத்தியாயத்தின் 172 ஆம் பிரிவின் பிரகாரம் சேவையிலிருந்து விலகிச் சென்ற கட்டளையும் விநியோகிக்கப்படவில்லை. எனினும், 2018 மார்ச் 23 ஆந் திகதி விலகிச் சென்றதாக தலைவரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) கொழுப்பு மாநகர சபையிலிருந்து பதிலாள் இன்றி 2015 பெப்ரவரி மாதத்தில் இடமாற்றலாகி வந்த சாரதியொருவர் வருகை மற்றும் வெளிச்செல்கைப் பதிவேட்டில் கையொப்பம் இட்டமை மாத்திரம் மேற்கொண்டிருந்த போது அந்த சாரதிக்கு 2015 பெப்ரவரி முதல் செய்தெம்பர் வரை ரூபா 248,605 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2015 செப்தெம்பர் முதல் மீண்டும் கொழுப்பு மாநகர சபைக்கு இடமாற்றலாகிச் சென்ற மேற்கூறப்பட்ட சாரதிக்கு 2015 ஒக்தோபர் முதல் 2017 நவம்பர்வரை சம்பளமாக ரூபா 862,927 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) தொடர்ச்சியாக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த 22 ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஊழியர் கடன்**

மரணமடைந்த, இடமாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 24 ஊழியர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,180,939 ஆகும்.

**3.3 செயற்பாட்டு செயற்றறினின்மை**

**(அ) இருப்புக்கட்டுப்பாடு**

(i) பிரதான அலுவலகத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரப் பொருட்கள் மற்றும் மின்சார பிரிவிற்கு விநியோகிக்கப்பட்ட மின்சாரப் பொருட்கள் என்பவற்றின் ஒவ்வொரு நாளிலும் மீதியைக் காண்பிக்கின்ற பதிவேடொன்று உப அலுவலகத்தால் பேணிச் செல்லப்படவில்லை.

(ii) வாத்துவ உப அலுவலகத்தினால் மின்சாரப் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக களஞ்சியப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மின்சாரப் பிரிவிற்கு பெறப்பட்ட மின்குமிழ்களில் தொடரிலக்கத்தின் பிரகாரம் குறிப்பிடப்படாதிருந்ததுடன் மின் கம்பங்களில் மின்குமிழ்களைப் பொருத்தும் போதும் தொடர் இலக்கங்களுக்கு இணங்க பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கழற்றி அகற்றப்படுகின்ற மின்குமிழ்கள் சரியான முறையில் களஞ்சியத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் உத்தரவாதக் காலத்தை விஞ்சாத மின்குமிழ்களை மீண்டும் மாற்றிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வீதி விளக்கு பட்டியல்களைத் தீர்த்தல்**

கெசெல்வத்த உப அலுவலகத்திற்குரிய பிரதேசங்களில் வீதி விளக்குகளுக்காக சேவையினை வழங்குதல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படும் போது வீதி விளக்கு பாவனைக்காக 2017 சனவரி முதல் ஒக்தோபர் வரை உடன்படிக்கையின்றி இலங்கை மின்சார தனியார் கம்பனிக்கு ரூபா 766,722 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை**

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,192,665 பெறுமதியான தளபாடங்களும், பொருத்திகளும், ரூபா 2,987,929 பெறுமதியான இயந்திரங்களும், இயந்திர உபகரணங்களும் மற்றும் ரூபா 3,803,625 பெறுமதியான மோட்டார் வாகனமும் வண்டியும் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும் காணப்படவில்லை.

(ஆ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேட்டில் சபைக்குச் சொந்தமான காணியாக இனங்காணப்பட்ட 34 காணிகளுக்குரிய காணியின் பெயர், பெறுமதி மற்றும் உரித்துறுதி இலக்கம் என்பன உள்ளடக்கப்படாதிருந்ததுடன் காணிகளுக்குரிய உரித்துறுதியும் சபையிடம் காணப்படவில்லை.

**3.4.2 பராமரிப்பும் பழுதுபார்த்தலும் மேற்கொள்ளப்படாமை**

மீளாய்வாண்டில் நீர் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்காக 194 வீதிகளை உடைத்ததற்காக ரூபா 2,291,859 தொகை சபைக்குக் கிடைத்திருந்த போதிலும், ஆண்டின் போது அதில் 30 வீதிகள் மாத்திரமே பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 வழங்கல் மற்றும் சேவை**

கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக சேவை நிறுவனமொன்றை தெரிவு செய்யும் போது குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்படாமல் அதிக விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கேள்வியை பெற்ற நிறுவனத்தால் கழிவுப்பொருள் அகற்றுகின்ற இடத்திற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் பெற்றிருக்கவில்லை. கேள்வி கையளிக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அகற்றுகின்ற நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கை ஒரு மாதத்திற்கு மாத்திரமாக இருந்த போதிலும், ஆண்டு முழுவதும் அந்த உடனபடிக்கை அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அகற்றும் நடவடிக்கைகள் சரியான மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றிருக்கவில்லை.

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

**வேலைகளை நிறைவேற்றுதலில் நலிவுகள்**

**(அ) பெத்தேகம போகஹ வீதிக்கு இடப்பக்கமாகவுள்ள உப வீதிக்கு கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்தல்**

(i) வீதியின் நீளம் 53.8 மீற்றர் முதல் 64 மீற்றர் வரை, அகலம் 0.23 மீற்றர் குறைவாக கொங்கிறீட் இடப்பட்டிருந்ததுடன் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பலகை இட்டு 0.23 மீற்றர் கொங்கிறீட் இடப்பட்டமையால் அப்பகுதி சரியான பிரகாரம் வீதியுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதியில் காணப்பட்ட வேண்டிய ஆழம் 0.125 மீற்றராக இருக்க வேண்டிய போதிலும், 29.5 மீற்றர் இடத்தின் ஆழம் 0.089 மீற்றர் ஆகவும், 46.4 மீற்றர் இடத்தில் ஆழம் 0.10 மீற்றர் ஆகவும், 53.8 மீற்றர் இடத்தின் ஆழம் 0.10 மீற்றர் ஆகவும் காணப்பட்டது.

(iii) வீதியின் அகலத்தை சரியான பிரகாரம் கண்டறிய முடியாத வகையில் இருபக்கமும் கொங்கிறீட் வழிந்தோடியிருந்தது.

(iv) ஒப்பந்தகாரச் சங்கத்தின் நிதி மற்றும் செயலாற்றல் இயலுமை தொடர்பாக பிரதேச செயலாளரின் சான்றிதழ் காணப்படவில்லை.

**(ஆ) வேகட கிழக்கு பஹத்கம பிரதான வீதி இறுதிவரையும் அபிவிருத்தி செய்தல்**

(i) இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் 207 மீற்றர் தார் இடப்பட வேண்டிய போதிலும் 172 மீற்றர் மாத்திரம் தார் இடப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) வீதியின் சில இடங்களில் கல் வெளிப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தகாரச் சங்கத்தின் நிதிச் செயலாற்றல் இயலுமை தொடர்பாக பிரதேச செயலாளரின் சான்றிதழ் காணப்படவில்லை.

**(இ) பாணந்துறை குறுப்புமுல்ல பென்சேகா வத்த வீதி வளைவுப் பகுதியை அபிவிருத்தி செய்தல்**

(i) வீதியின் நீளம் 65.15 மீற்றராக இருந்த போதிலும், 58.8 மீற்றர் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தகாரச் சங்கத்தின் நிதிச் செயலாற்றல் இயலுமை தொடர்பாக பிரதேச செயலாளரின் சான்றிதழ் காணப்படவில்லை.

**(ஈ) அம்பகஹவத்த வடிகாண் முறைமையை அமைத்தல்**

இந்த செயற்திட்டத்தின் பகுதியொன்று ரூபா 253,577 தொகையான மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பகுதி நிறைவேற்றப்படாமையினால் அதன் அருகில் குடியிருக்கின்ற வீடுகள் நீரினால் தாழுகின்ற நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமமானம் 13 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையும் செலவினம் 03 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | **முறைமைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடல் மற்றும் குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டமை |
| | | (ii) | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) | பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை. |
| | | (ii) | பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வரி அறவிடல் போதியளவான |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரகாரம் இடம்பெறாமை. |
| (ஈ) | இருப்புக்கள் | (i) | பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை |
| | | (ii) | முறையற்ற இருப்புக் கட்டுப்பாடு |
| | | (iii) | பெறுகை, விநியோகம் தொடர்பாக மேற்பார்வை மேற்கொள்ளாமை |
| (உ) | கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | (i) | பட்டோலை தயாரிக்கப்படாமை |
| | | (ii) | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (ஊ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) | பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்படாமை |
| | | (ii) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (எ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை |
| (ஏ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | | (ii) | வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இன்மை. |
| (ஐ) | செயற்திட்டம் / ஒப்பந்தம் | | போதியளவான மேற்பார்வை இடம்பெறாமை |